ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2034/33 - 2017 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2017.09.01

2034/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 4/81 (XII)*

***1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்***

*23 ய ஆம் பிரிவின் கீழான கட்டளை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 ய என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளை மூலம் -

1. (i) நாட்டின் பயன்பாட்டுக்கென தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்குக் கீழான பொலித்தின் அல்லது ஏதேனும் பொலித்தின் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்தலையும் ; அத்துடன்

(ii) நாட்டினுள் தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்குக் கீழான ஏதேனும் பொலித்தினை அல்லது பொலித்தின் உற்பத்திப் பொருளை விற்பனை செய்தலை, விற்பனைக்காக முன்வைத்தலை, இலவசமாக வழங்குதலை, காட்சிப்படுத்தலை, அல்லது பயன்படுத்துவதைத்

தடை செய்கின்றேன்.

ஆயினும், தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்குக் கீழான பொலித்தின் அல்லது ஏதேனும் பொலித்தின் உற்பத்திப் பொருள், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அதிகாரசபையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன் பயன்படுத்தப்படலாம்.

2. 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதிய 1466/5 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை, அதன் கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துகிறேன்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக -

“அதிகாரசபை” என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபை எனப் பொருள்படும் ;

1A - PG 3676 — 5007 (2017/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

"பொலித்தின்" என்பது, எல்லா வடிவங்களிலுமான பொலிஎத்திலின், பொலிபிரோப்பலின், பொலியெஸ்டரின், பொலிவினைல்குளொரைட், பொலிஎத்திலின், டெரெப்தலேட் அல்லது வேறு ஏதேனும் ஒத்த மூலப்பொருள் எனப் பொருள்படும்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2017, ஓகத்து 30.

**அட்டவணை**

அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள்

1. மென்தகடாக்கும் நோக்கத்துக்காக பின்வரும் பொருட்களைப் பயன்படுத்தல் :-

(அ) உலோகப்படுத்தப்பட்டதாயினும் அல்லது இல்லாவிடினும் பொலிஎத்திலின் டெரெப்தலேட் (PET) அல்லது ஹோலோகிராபிக் படம் ;

(ஆ) உலோகப்படுத்தப்பட்டதாயினும் அல்லது முத்துப்போலாக்கப்பட்டதாயினும் அல்லது இல்லாவிடினும் பொலிபிரோப்பலின் (PP) படங்கள் ;

(இ) நைலோன் ;

(ஈ) காஸ்ட் பொலிபிரோப்பலின் (CPP) அல்லது உலோகப்படுத்தப்பட்ட காஸ்ட் பொலிபிரோப்பலின் (CPP) ;

(உ) பொலிவினைல்குளோரைட் (PVC) ;

(ஊ) பொலிஎத்திலின் டெரெப்தலேட் கிளைகோல் (PETG ).

2. வேறேதேனும் பொருத்தமான மாற்றீடு இல்லாத போது மருத்துவம்சார் அல்லது மருந்தகங்களின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல்.

9- 361

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.